தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 10.6.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில்முனைவோருக்கான பயிற்சி

மத்திய அமைச்சகத்தின் வேளாண் மற்றும் விவசாய நலத் துறை நிதி உதவியுடன் R-ABI திட்டத்திற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் கோயம்புத்தூரில் இயங்கி வரும் தொழில் நுட்ப வணிக காப்பகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு **MANAGE** ஹைதராபாத் அறிவுசார் பங்குதாரராக செயல்படும். வேளாண்மை சார்ந்த புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கருத்துக்களை கொண்ட பட்டதாரி இளைஞர்கள் இத்திட்டத்தில் சேர விண்ணப்பிக்கலாம். பரிசீலனைக்குப் பின் இத்திட்டத்தின் மூலம் 20 பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதத்திற்கு ரூ.10,000 மானியத்தொகையுடன் 2 மாத கால பயிற்சி அளிக்கப்படும். விண்ணப்பித்தவர்கள் அவர்களின் புதிய தொழில் யோசனை மற்றும் கருத்துக்களின் வணிக திட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

வேளாண் தொழில் நுட்ப முனைவோருக்கான பயிற்சி 26.06.2019 முதல் 25.08.2019 வரை வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கத்தில் நடைபெறும். இதன் மூலம் பயிற்சி பெற்ற நபர்கள் மத்திய அமைச்சகத்தின் வேளாண் மற்றும் விவசாய நலத் துறையால் பரிசீலிக்கப்பட்டு வேளாண் தொழில் முனைவோருக்கான மானியம் ரூ.5 இலட்சம் வரை வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் பதிவிறக்கம் செய்ய :**

www.tbitnau.com /
https://sites.google.com/a/tnau.ac.in/tbi/

**மேலும் விபரங்களுக்கு :**

முதன்மை செயல் அலுவலா் -TBI
0422- 2449378 / 6611310
மின்னஞ்சல் :tbi-abis@tnau.ac.in

மக்கள் தொடர்பு அலுவலர்